பக்கங்கள் 21+ 04

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 28 சனிக்கிழமை 12.07.2024 | அதிர்வு 343

## கண்டியில் கோர விபத்து! இருவர் பரிதாப மரணம்!!




கண்டியில் ஹசலக்க பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹசலக்க – ஹெட்டிப்பொல வீதியில் இடம்பெற்ற விபத்தில் 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# வவுனியா அமைதியின்மையில் 5 பொலிஸார் காயம்!

## பொலிஸாரின் மூன்று வாகனங்களும் சேதம்

(கி.வசந்தன்)

வவுனியா, கூமாங்குளத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்ததைத் தொடர்ந்து இடம்பெற்ற அமைதியின்மையில் 5 பொலிஸார் காயமடைந்துள்ளதுடன், பொலிஸாரின் 3 வாகனங்களும் சேதமடைந்துள்ளன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். 02▶




# செம்மணியில் எலும்புக்கூடுகளை அகழ்ந்தெடுப்பதால் என்ன பயன்?

## இப்படித் தமிழர்களிடம் கேட்கின்றார் விமல் வீரவன்ச
## மீண்டும் இரத்தக்களரியை ஏற்படுத்த வேண்டாமாம்

“யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் எலும்புக் கூடுகளை அகழ்ந்து எடுப்பதால் என்ன பயன் கிடைக்கும் என்று தமிழர்கள் எண்ணுகின்றார்கள்? அதனால் எந்தப் பயனும் கிடைக்காது. முதலில் அந்த மனித எலும்புக்கூடுகள் தமிழர்கள்தான் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இன்னமும் பரிசோதனை நடத்தாமல் அந்த மனித எலும்புக்கூடுகளை வைத்துத் தமிழ்த் தரப்பினர் அரசியல் இலாபம் தேட முற்படுகின்றனர்.”

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார். 03▶



# இலங்கைக்கான புதிய அமெ. தூதராக எரிக் மேயரை நியமிக்கப் பரிந்துரை



## வெள்ளை மாளிகை அறிவிப்பு

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதராக எரிக் மேயரை நியமிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பரிந்துரை செய்துள்ளார் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. இந்நிலையில், எரிக் மேயரின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பரிந்துரை செய்து அமெரிக்க செனட் சபைக்கு உறுதிப்படுத்தலுக்காகச் சமர்ப்பித்துள்ளார்.

கலிபோர்னியாவைச் சேர்ந்த எரிக் மேயர், சிரேஷ்ட இராஜதந்திர சேவை 02▶

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மதுபானசாலைக்கு அருகில் நேற்று இரவு வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் வீதி யோரமாக வீழ்ந்து இறந்துள்ளார்.

அவரை வீதியில் நின்ற பொலிஸார் விரட்டிச் சென்றமையால் மேற்படி நபர் வீழ்ந்து இறந்துள்ளார் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். சம்பவத்தில் இராம சாமி அந்தோனிப்பிள்ளை (வயது 58) என்பவரே மரணமடைந்தவராவார்.

இதன்போது, மதுபானசாலையில் இருந்து வெளியில் வந்த பலர் வீதியில் இறந்து கிடந்தவருக்கு அருகில் சென்ற போக்குவரத்துப் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது 4 போக்குவரத்துப் பொலிஸார் காயமடைந்துள்ளதுடன், அவர்கள் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் தாக்குதலுக்குள்ளாகி கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

காயமடைந்த பொலிஸார் வழங்கிய தகவலையடுத்து அங்கு கப் ரக வாகனத்தில் வந்த பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் கப் ரக வாகனம் சேதமடைந்துள்ளதுடன் அதன் சாரதியான பொலிஸாரும் காயமடைந்துள்ளார். இதன்போது பொலிஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களை நடத்தி நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

அத்துடன், வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர், வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட சம்பவ இடத்துக்கு மேலதிக பொலிசார் வரைவழைக்கப்பட்டதுடன், விசேட அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டனர்.

பொலிஸாருக்கும் அங்கு குழுமியவருக்கும் இடையில் கடும் முரண்பாடு ஏற்பட்ட நிலையில் அங்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ப. சத்தியலிங்கம் வீதியில் வீழ்ந்து கிடந்தவர் இறந்தமையை உறுதி செய்தார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த திடீர் மரண விசாரணை அதிகாரி சடலத்தைப் பார்வையிட்டதுடன், அதனைப் பொலிஸாரின் வாகனத்தில் ஏற்றி வைத்தியாலைக்கு அனுப்பி வைத்தார்.

இதனையடுத்து அங்கு குழுமியிருந்தவர்கள் பொலிஸாரின் வாகனத்தில் சடலம் கொண்டு செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து குழப்பம் விளைவித்தனர்.

இதேவேளை, வவுனியா – கூமாங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவர் வீழ்ந்து கிடப்பதாக நேற்று இரவு போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் நால்வருக்கு நபர் ஒருவரால் தகவல் வழங்கப்பட்டது எனவும், அதன்படி நான்கு பொலிஸ் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்குச் சென்ற போது, அருகில் இருந்த ஒரு குழு அவர்களைத் தாக்கியது எனவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தரைப் பொலிஸார் விரட்டிச் சென்றபோது இடம்பெற்ற சம்பவம் காரணமாகவே அந்த நபர் கீழே வீழ்ந்து இறந்துவிட்டார் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய குழு தெரிவித்துள்ளது. அருகிலுள்ள மதுபானக் கடையில் மது அருந்திக் கொண்டிருந்தவர்களைப் பொலிஸ் அதிகாரிகள் கைது செய்தனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், உயிரிழந்த நபர், ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளின் சக்கரத்தில் பொலிஸார் ஒரு கட்டையை வீசியதன் காரணமாக, அவர் வீழ்ந்து இறந்தார் என்று கிராம மக்கள் கூறியுள்ளனர்.

இருப்பினும், அவ்வாறு நடந்திருந்தால், சக்கரம் சேதமடைந்திருக்கும் எனவும், ஆனால் விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிளின் சக்கரத்துக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை எனவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸ் கலகத் தடுப்புப் பிரிவினரும், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டனர்.

பிரதேச மக்களால் தாக்கப்பட்ட 5 பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மதவாச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு இன்று காலை தடவியல் பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன் நீதிபதியும் சம்பவ இடத்தை ப் பார்வையிட்டு விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் சிறப்பு குழுக்களை நியமித்து பல்வேறு கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## இலங்கைக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் கடமையாற்றும் ஒரு தொழில்சார் அதிகாரி ஆவார். தற்போது எரிக் மேயர், தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் சிரேஷ்ட பணியக அதிகாரியாகச் செயற்படுகின்றார்.

அத்துடன் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, கஸகஸ்தான், கிர்கிஸ்தான், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் அமெரிக்க அரசின் கொள்கை முன்னுரிமைகளை ஒருங்கிணைக்கும் பணிகளை அவர் முன்னெடுத்து வருகின்றார்.

அண்மையில், எரிக் மேயர், நோர்வேயில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் தற்காலிக தூதராகவும், வடமேசிடோனியாவின் ஸ்கோப்பே நகரத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் தற்காலிக தூதராகவும், துணைத் தூதராகவும் பணியாற்றியுள்ளார்.

இதேவேளை, எரிக் மேயர், மத்திய ஆசியாவில் கஸகஸ்தானின் அமெரிக்கத் தூதுவராகச் செயற்பட்டு, அமெரிக்க நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், பல நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் பணிகளையும் மேற்கொண்டார்.

வொஷிங்டனில் தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய விவகாரங்கள் பணியகத்தில் சிறப்பு உதவியாளர் மற்றும் சிரேஷ்ட ஆலோசகராக எரிக் மேயர் பணியாற்றியுள்ளார்.

அத்துடன் கம்போடியாவில் தூதரகத் தலைமை அதிகாரியாகவும், இடைக்கால துணைத் தூதராகவும் அவர் செயற்பட்டுள்ளார். பின்லாந்திலுள்ள அமெரிக்கத் தூதராகவும் கடமையாற்றிய எரிக் மேயர், ஆர்ஜன்டீனாவின் துணைத் தூதராகவும், பின்னர் எகிப்தின் கெய்ரோவிலுள்ள பண்பாட்டு விவகாரத் தூதராகவும் பணியாற்றினார்.

வொஷிங்டனில், ஆர்க்டிக் கவுன்சிலின் அமெரிக்கத் தலைவராக எரிக் மேயர் இருந்தபோது கடல்சார், சர்வதேச சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் விவகாரங்களுக்கான பணியகத்தின் ஆலோசகராகவும் செயற்பட்டுள்ளார்.

அமெரிக்க வெளியுறவு துறைக்குள் இணைவதற்கு முன்னர் எரிக் மேயர், விமானப் போக்குவரத்து துறையில் நிறுவன விற்பனை மற்றும் அரச தொடர்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

எரிக் மேயர், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் பெர்க்லி வளாகத்தில் அரசியல் அறிவியலில் பட்டம் பெற்றுள்ளதுடன் ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ பட்டமும் பெற்றுள்ளார்.

அவருக்கு அமெரிக்க வெளியுறவுத்துறையில் இருந்து பல உயரிய பாராட்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. எரிக் மேயர் டெனிஷ், பிரெஞ்சு, கம்மேர், ரஷ்யன் மற்றும் ஸ்பானிஷ் ஆகிய மொழிகளை பேசக்கூடிய ஆற்றலுடையவர்.

இதேவேளை, மலேசியாவுக்கான புதிய அமெரிக்காவின் தூதுவராக புளோரிடாவைச் சேர்ந்த நிக்கோலஸ் அடம்ஸின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் தாய்லாந்துக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக வேர்ஜினியாவைச் சேர்ந்த ஷான் ஓ நீலின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் கசகஸ்தானுக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஒஹியோவைச் சேர்ந்த ஜூலி ஸ்டஃப்டின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உடவலவில் இருந்து ஹெட்டிப்பொல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று முன்னால் பயணித்த சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துநரும், சைக்கிளில் பயணித்த வயோதிபரும் படுகாயமடைந்த நிலையில் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் பரவதர்ன மற்றும் ஹசலக்க ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரும், 73 வயதுடைய வயோதிபரும் ஆவர்.

இந்த விபத்து தொடர்பில் ஹசலக்க பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# 2 இலட்சம் போதை மாத்திரைகள் விசேட அதிரடிப் படையால் மீட்பு!

(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டன என நம்பப்படும் 2 இலட்சம் போதை மாத்திரைகள் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து அதிக போதை மாத்திரைகள் மன்னார் கடல் பகுதியூடாகக் கடத்தி வரப்படுகின்றன என்று விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பேசாலையில் விசேட அதிரடிப் படையினர் நேற்று மேற்கொண்ட தேடுதலின்போதே 2 இலட்சம் போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக நடவடிக்கைக்காக சான்றுப்பொருள்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



# கட்டடம் ஒன்றின் மேல் மாடியிலிருந்து கீழே தவறி வீழ்ந்து கட்டுமானத் தொழிலாளி பலி!

கட்டடம் ஒன்றின் மேல் மாடியிலிருந்து கீழே தவறி வீழ்ந்து கட்டுமானத் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கண்டி, கம்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கஹடபிட்டிய பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் கம்பளை 58 வயதுடைய கட்டுமானத் தொழிலாளி ஆவார்.

இவர் கட்டடப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது கால் தவறி கீழே வீழ்ந்துள்ள நிலையில் ஏனைய தொழிலாளிகளின் உதவியுடன் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் ஏற்கனவே தெரிவித்தது போல் போர் நடந்த மண்ணில் மனித எலும்புக் கூடுகள் வெளிக்கிளம்பும் என்பது உண்மை.

அதேவேளை, போர் நடந்த வடக்கு மண்ணில் தமிழர்கள் மாத்திரம் உயிரிழக்கவில்லை. அங்கு இராணுவத்தினரும் இறந்தார்கள், சிங்கள, முஸ்லிம் மக்களும் இறந்தார்கள்.

போரில் இறந்த தமது உறவுகளின் எலும்புக்கூடுகளை வைத்து அரசியல் நடத்தும் தேவை சிங்கள – பௌத்தர்களுக்குக் கிடையாது. ஆனால், யார் என்றே உறுதிப்படுத்தாத எலும்புக்கூடுகளை வைத்துத் தமிழர்கள் கேவலமான முறையில் அரசியல் நடத்துகின்றார்கள்.

இந்த நாட்டில் மீண்டும் இரத்தக் களரியை ஏற்படுத்த தமிழர்கள் விரும்புகின்றார்களா?" – என்று கேள்வி எழுப்பினார் விமல்.



# தேசிய இனங்களின் உரிமைகளை வலியுறுத்தி வவுனியாவில் இன்று கையெழுத்துப் போராட்டம்

(கி.வசந்தன்)

அனைத்து தேசிய இனங்களுக்கும் உரிமைகளை உறுதி செய்யுமாறு கோரி சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கையெழுத்துப் போராட்டம் இன்று இடம்பெற்றது.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு, காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு, சம உரிமைகளை உறுதி செய்யும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவோம் போன்ற வலியுறுத்தல்கள் முன்வைக்கப்பட்டன. இந்தப் போராட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# பெருமளவிலான தமிழ் மக்களை புலிகளே படுகொலை செய்தனர்

## இப்படிக் கூறுகின்றது மொட்டுக் கட்சி

"போர்க் காலத்தில் விடுதலைப்புலிகளே பெருமளவிலான தமிழ் மக்களைப் படுகொலைசெய்தனர். இராணுவத்தினர் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடவில்லை."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது செம்மணி விவகாரம் மற்றும் படையினருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"போர்க் காலத்தில் நீலம் திருச்செல்வம், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் போன்றவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதிகளவான தமிழர்களை விடுதலைப் புலிகளே கொலை செய்தனர். எமது இராணுவம் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

கொழும்பில் கொலை செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களுள் பெரும்பாலானவர்களை விடுதலைப்புலிகளே கொன்றனர். துரையப்பாவை கொன்றதும் விடுதலைப்புலிகள்தான்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளின் பயங்கரவாத நடவடிக்கையை அனுமதிக்காத – சமாதானத்தை கோரிய மக்களைக் கொன்றதும் அவர்கள்தான்.



அரசியல் இலாபத்துக்காகத் தமிழ்த் தரப்பு செம்மணியைப் பயன்படுத்தக் கூடும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாடாளுமன்றம் வந்தார். இராணுவத்தக்கு எதிராகத் தமிழ்க் கட்சியினர் மற்றும் அர்ச்சுனா ஆகியோர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். நாமல் அதனை மறுத்தார். ஆளுங்கட்சியினர் வாய் திறக்கவில்லை. இது தவறாகும்."

– என்றார்.

# கிண்ணியா மீன் சந்தை வருமானம் தனிப்பட்டவர்களால் அபகரிப்பு

## கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம்.மஹ்தி தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிண்ணியா நகர சபையின் மீன் சந்தை வருமானம் தனிப்பட்டவர்களால் அபகரிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம்.மஹ்தி தெரிவித்தார்.

கிண்ணியா நகர சபையில் இன்று (12)இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கிண்ணியா நகர சபையானது புதிதாக அமையப்பெற்றதன் பின்னர் மக்களுக்காகப் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அவற்றை அடையாளப் படுத்திச் செயற்படுத்துவதற்கும் அவற்றை நிறைவேற்றுவதற்கும் நிதிப் பற்றாக்குறை தடையாக இருக்கின்றது.

வழமையான கழிவு அகற்றல், ஹோட்டல் கழிவுகளை அகற்றல், மின் குமிழ்களை பழுது பார்த்தல் போன்ற பணிகளைக் கூட நிறைவேற்ற முடியாமல் நகரசபையின் அனைத்து செயற்பாடுகளும் முடங்க வேண்டிய துரதிர்ஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களுக்கான மொத்த சம்பளத்தையும் ஏனைய சபையின் நிரந்தர உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கான மொத்த மாதாந்த சம்பளத்தில் 20 வீத சம்பளத்தையும்ததையும் சபையே வழங்க வேண்டுமென்ற புதிய நிர்பந்தமும் இருக்கின்றது.

கிண்ணியா நகர சபைக்கு வருமானத்தைப் பெற்றுத் தருவதில் மீன் சந்தைக் குத்தகை பாரிய பங்களிப்பை செய்து கொண்டிருக்கின்றது.



நாளாந்தம் நாற்பது தொடக்கம் நாற்பத்து ஐயாயிரம் ரூபா வரையிலான வருமானத்தை பெற்றுத் தரக்கூடிய மீன் சந்தை குத்தகை வருமானத்தில் 2025 ஆம் ஆண்டின் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து இதுவரை ஒரு சதமேனும் கிடைக்க வில்லை.

குறித்த அந்த நகர சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானமானது தனிப்பட்ட சிலரதும் மீனவ சங்கத்தினதும் கட்டுப்பட்டின் கீழ் சட்டத்துக்கு முரணாக அவர்களால் வசூலிக்கப் படுகின்றது.

கிண்ணியா நகரசபைக்குக் கிடைக்க வேண்டிய அந்தப் பணம் ஏனையோரின் கைகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றது. அவற்றுக்கான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்திலும் தொடரும்.

பொது மக்களுக்குச் சேவை செய்ய பயன்படுத்தப்பட வேண்டிய வரிப் பணமானது முறையற்ற விதத்தில் தனிப்பட்டவர்களின் கைகளுக்கு செல்வதானது சட்ட விரோத செயற்பாடாகும் என்பதால் அவற்றைத் தடுத்து நிறுத்தி வருமானத்தை நகர சபைக்கு பெற்றுக் கொள்வதற்காக தொழிலாளர் மற்றும் சபை உறுப்பினர்களால் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

12 மீனவ சங்கங்களுக்குப் பொதுவான கிண்ணியா மீனவர்களுக்கான ஓய்வு மண்டபத்தைக் குறிப்பிட்ட ஒரு மீனவ சங்கம் அது தமக்கு உரியது என தனி உரிமை கோருகிறது. நகர சபையின் அனுமதியின்றி தனிப்பட்டவர்களால் மீன் சந்தை நடத்தப்பட்டும் வருகின்றது. ஏனைய 11 மீனவ சங்கங்களையும் ஓரங்கட்டி விட்டே இந்த முறைகேடுகள் நடைபெறுகின்றன.

இவ்வாறான முறைகேடுகளுக்கு மீன்பிடித் திணைக்களமும் துணை போகின்றதா என்ற கேள்வியும் எழுப்புகின்றது.

வெளிப் பிரதேசங்களில் இருந்து கொண்டு வரப்படும் மீன்களில் பாவனைக்கு உதவாத மீன்களும் விற்கப்படுவதாக பொது மக்களால் முறைப்பாடுகளும் செய்யப்படுகின்றன.

அந்த முறைப்பாட்டுக்கு அமையக் கொண்டு வரப்படுகின்ற அனைத்து மீன்களும் பொது சுகாதார வைத்திய அதிகாரியால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

இவ்விடத்தில் உள்ளூராட்சி அதிகார சபைக்குக் கிடைக்க வேண்டிய வரிப்பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு 11 மீனவ சங்கங்களும் வியாபாரிகள் சங்கமும் இணக்கம் தெரிவித்துள்ளன.

எனவே இதுகுறித்து முறையற்ற விதத்தில் தனி நபர்கள் கையகப்படுத்தும் குறிப்பிட்ட நிதியை நகர சபைக்கு கிடைக்க செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.– என்றார்.

# வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் பத்து மாணவர்கள் 9 ஏ பெற்று சாதனை

(கி.வசந்தன்)

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் 10 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ளன. அந்தப் பெறுபேற்றிலேயே வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவர்களும் சாதனை படைத்துள்ளனர்.

அந்தவகையில், பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் காண்டீபன் கிருஸ்சிககேசன், ஸ்கந்தராசர்மா கஜானன், குணதரசர்மா சருஜசர்மா, இராமகிருஸ்ணன் வோகித், சிவராசா தட்சாயினி, கந்தராசா டிஜானா, திலகநாதன் ஹரிணி, உதயதாசன் யதுசன், நிலாந்திரன் துபதாசன், யோகேஸ்வரன் ரஜீவ் ஆகிய 10 மாணவர்களும் 9 ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.




அத்துடன், 2 மாணவர்கள் 8ஏ,பி சித்திகளையும், 4 மாணவர்கள் 7ஏ 2பி சித்திகளையும், ஒரு மாணவர் 7ஏ,பி,சி சித்தியையும், ஒரு மாணவர் 7ஏ பி,எஸ் சித்தியையும், ஒரு மாணவர் 7ஏ 2சி சித்தியையும் பெற்றுள்ளனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மறந்து போன வாக்குறுதி

எப்போதுமே சொல்லுவது சுலபம். செய்வது கஷ்டம். அதுவும் அரசியலில் வாயால் எதையும் முழங்கலாம். ஆனால் செயலில் செய்வது - நடைமுறைப்படுத்துவது - ரொம்பவும் நெருக்கடியானது.

எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து கொண்டு எல்லாம் சொல்லலாம். எதையும் விமர்சிக்கலாம். அதில் கஷ்டம் இல்லை. ஆனால் அதிகாரத்தைக் கையில் எடுத்த பின்னர் சொன்னதைச் செய்வதென்பது மிகக் கஷ்டமானது.

இவ்வளவு காலமும் அரசியலில் இருந்து முழங்கிக் கொண்டிருந்த - பல தரப்புகளையும் கண்மண் தெரியாமல் காட்டமாக விமர்சித்துக் கொண்டிருந்த - தேசிய மக்கள் சக்தி தலைவர்களுக்கு இப்போதுதான் சொன்னவற்றைச் செய்வது எவ்வளவு கஷ்டமானது என்பது புரியத் தொடங்கி இருக்கும்.

தாங்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் நாட்டின் அரசியல் செல்நெறியையே மாற்றுவோம், அரசமைப்பையே புதிதாகக் கொண்டு வருவோம் என்றார்கள். மக்கள் அரசமைப்பை மாற்றக்கூடிய தேவையான எல்லா விடயங்களையும் இந்த ஆளும் தரப்பினருக்கு அள்ளிக் கொடுத்து விட்டார்கள். ஆனால் அரசமைப்பு மாற்றம் என்ற முக்கிய முடிவை நடைமுறைப்படுத்துவதை இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குத் தாங்கள் தள்ளிப் போட்டு விட்டார்கள் என ஜனாதிபதியும் ஆளும் தரப்பினரும் அறிவித்து விட்டனர்.

ஆயினும், அரசமைப்பு உருவாக்கம் நடக்கும் வரை என்ன செய்வோம் என்பதையும் அவர்கள் எதிரணியில் இருந்து கொண்டு முழங்கி இருந்தார்கள். அதையும் கூட இப்போது மறந்து விட்டார்கள்.

புதிய அரசமைப்பு வரும் வரை 13ஆம் திருத்தத்தில் உள்ள மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்துவோம் என்று தேர்தலுக்கு முன்னர் முழங்கிய ஜனாதிபதியும் ஆளும் தரப்பினரும் இப்போது அதனை அடியோடு மறந்து விட்டனர்.

அரசமைப்பு உருவாக்கத்தையும் தள்ளி வைத்து விட்டார்கள். அதற்கு முன்னர் செய்வோம் என்று சொன்னவற்றையும் மறந்து விட்டார்கள்.

13ஆம் திருத்தத்தின் கீழ் மாகாண சபை முறையை நடைமுறைப்படுத்துவதானால் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும். அதை நடத்துவதற்கு தேவையான சட்ட மூலத்தை தனிநபர் பிரேரணையாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விட்டார். அதன் மீதான முதல் வாசிப்பும் முடிந்துவிட்டது. சம்பந்தப்பட்ட அமைச்சர் அதனை இனி முன்னகர்த்துவதுதான் எஞ்சியிருக்கும் வேலை.

ஏற்கனவே இத்தகைய தனிநபர் சட்ட மூலம் முன்னைய நாடாளுமன்றத்தில் சுமந்திரன் சமர்ப்பித்து, முதலாம் வாசிப்பு முடிவடைந்து, உயர் நீதிமன்றம் பரிசீலித்து, இரண்டாம் வாசிப்பில் உரிய திருத்தங்கள் செய்து, சட்டமாவதற்காக மூன்றாம் வாசிப்புக்கு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட இருக்கையில் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு ஆப்படித்துத் தடுத்து விட்டார்.

ஆக, ஏற்கனவே உயர் நீதிமன்ற பரிசீலனை தாண்டி வந்த சட்ட மூலம் இது. இதனை ஆளும் தரப்பு நினைத்தால் இரண்டு வாரங்களுக்குள் சட்டமாக்கி, மாகாண சபைத் தேர்தலுக்கான ஒழுங்குகளை உடனடியாகச் செய்ய முடியும்.

ஆனால் இந்த அரசுக்கு மாகாண சபை தேர்தலை நடத்தும் முதுகுத் துணிவு இப்போது இல்லை. ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் ஆளும் தரப்புக்குக் கிடைத்த வெற்றி உள்ளூராட்சி சபை தேர்தலில் பின்னடைவைக் காணத் தொடங்கிவிட்டது. தங்களுடைய வாய்ச்சவடால் மக்களுக்குப் புரியத் தொடங்கிவிட்டது என்பதை உணர்ந்து கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தி அரசு இன்னொரு தடவை அமிலச் சோதனை செய்யத் தயாராக இல்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்தி, இருக்கின்ற செல்வாக்கை இன்னும் மூக்குடைபட்டுப் பறிகொடுத்துக் கொள்ள அது விரும்பவில்லைப் போலும். அதனால் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் சோதனையை அது தவிர்த்துக் கொண்டுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் வரை 13-ஆம் திருத்தத்தின் படியான ஏற்பாடுகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்ற ஜனாதிபதியினதும் ஆளும் தரப்பினரதும் வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டு விட்டது என்பதுதான் நிலைமை.

எதிரணியில் இருந்து கொண்டு தான் முழங்கிய பல விடயங்களை ஆளுந்தரப்பு மறந்து போய்விட்டது என்பதுதான் இப்போது வெளிப்படும் உண்மை.



# வவுனியா நகருக்குள் நுழைந்து அட்டகாசம் புரிந்த காட்டு யானை

**(கி.வசந்தன்)**

வவுனியா நகரப் பகுதிக்குள் இன்று காட்டு யானை ஒன்று நுழைந்தமையால் உடமைகள் சில சேதமடைந்துள்ளதுடன் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்த யானை அதிகாலை தவசிக் குளம், மேட்டுத்தெரு, தோணிக்கல் வழி யாக வவுனியா நகரை அடைந் துள்ளது.

இதன்போது, தோணிக்கல் பகுதியில் வீடொன்றைச் சேதப்படுத்தியுள்ளதுடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் துவம்சம் செய்துள்ளது.

தோணிக்கல் வீதியால் வவுனியா நகரை அடைந்த யானை சந்தை உள்வட்ட வீதி ஊடாகச் சென்று தினச் சந்தைக்கு பின் பகுதியால் வவுனியா குளத்தில் இறங்கியது. இதன்போது சில கட்டடங்களின் மதில் சுவர்களையும் அது சேதப்படுத்தியுள்ளது.

வவுனியா குளத்தில் இறங்கிய யானை பல மணிநேரமாக வெளியே வர முடியாமல் தத்தளித்த வண்ணம் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

சம்பவம் தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்குத் தெரிவிக் கப்பட நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற அவர்கள் யானையைப் பாது காப்பாக அகற்றுவதற்கான நடவ டிக்கைகளை எடுத்துள்ளனர்.

இந்தக் காட்டு யானை வழி தவறி நகரப் பகுதிக்குள் வந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.













# உடப்பூர், சின்னக்கொலனி கருமுத்துமாரி பாலஸ்தாபனம்

**(உடப்பு க.மகாதேவன்)**

உடப்பூர், சின்னக்கொலனி ஸ்ரீ கருமுத்துமாரியம்மன் ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நேற்று (11) வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்றது.

காலை 9 மணி தொடக்கம் 10.22 மணி வரையுள்ள சுப நேரத்தில் இது இடம்பெற்றது.

கிரியை நிகழ்வுகள் சிவஸ்ரீ சுந்தரராமக்குருக்கள் பணிப்புரையில் உதவிக் குருக்களால் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது பக்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.



# உடப்பு தெற்கு பாலர் சிறுவர் சந்தை நிகழ்வு






**(உடப்பு க.மகாதேவன்)**

உடப்பு தெற்கு பாலர் பாடசாலையின் சிறுவர் சந்தை நிகழ்வு நேற்று (11) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையின்பொறுப்பாசிரியர்திருமதி.க.கார்த்தியாயினி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ந.கமலேஸ்வரன், குகதர்ஷன், கிராம சேவகர் வை.சிவக்காந்த், உடப்பு பொலிஸ் நிலைய அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, மாணவர்கள் பொருள்கள் விற்பனை செய்வதில் ஆர்வத்தைக் காட்டினர். பெற்றோரும் இதில் கலந்து கொண்டனர்.



# கூட்டுறவுத் துறையில் சிறந்த மாற்றம் இளையோரிடம் இருந்து வரவேண்டும்!

### வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவர் அகிலன் கதிர்காமர்

பொருளாதார நெருக்கடியான காலங்களே கூட்டுறவு எழுச்சியடைந்த காலமாகும். கூட்டுறவுத் துறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் இந்த மாற்றமானது இளம் சமுதாயத்தில் இருந்து வர வேண்டும். இது பாடசாலை மாணவர்களிடையே செல்ல வேண்டும். முன்னர் இருந்தது போன்று மீண்டும் பாடசாலை கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் அவர்களிடையே கூட்டுறவு பற்றிய அறிவை கொண்டு செல்ல முடியும்.

இவ்வாறு 2025 சர்வதேச கூட்டுறவு தினத்தில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவர் அகிலன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கூட்டுறவு தினமானது ஒவ்வொரு வருடமும் ஆடி மாதத்தின் முதல் சனிக்கிழமையில் கூட்டுறவாளர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

கடந்த சனிக்கிழமை (05) 103 ஆவது சர்வதேச கூட்டுறவு தினமானது யாழ். மாவட்ட கூட்டுறவு சபையால் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

இதில் விருந்தினர்களாக கூட்டுறவுத் துறையின் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருலிங்கநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சந்திரசேகரன், யாழ். பல்கலைக் கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரும் வட மாகாண ஆளுநரின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவருமாகிய கலாநிதி அகிலன் கதிர்காமர், மக்கள் வங்கியின் முன்னாள் பிராந்திய முகாமையாளரும் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளருமான சுசீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கூட்டுறவு பற்றி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றவர்களது பேச்சுகளும் இடம்பெற்றன. அவற்றைத் தொடர்ந்து விருந்தினர்களது உரை இடம்பெற்றது.



யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் வட மாகாண ஆளுநரின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவருமாகிய கலாநிதி அகிலன் கதிர்காமர் கருத்துரையாற்றுகையில்,

கடந்த 15 வருட காலமாகப் பல முயற்சியை மேற்கொண்டுள்ளோம். கிட்டத்தட்ட 100 இற்கும் மேற்பட்ட முயற்சிகளை அபிவிருத்திக்காக முன்கொண்டு சென்றுள்ளோம். தற்போது உள்ள நிலையை பற்றி அறிய சமூக பொருளாதாரம் பற்றி அறிய வேண்டும். தற்போது பல பிரதேசங்களில் ஏற்படும் யுத்த நிலமை (உதாரணமாக இஸ்ரேல் ஈராக் யுத்தம்) மற்றும் அமெரிக்க ஜனாதிபதியின் வரி அதிகரிப்பு போன்ற நிலமை காரணமாக எமது நாட்டில் மட்டுமல்லாது உலக பொருளாதாரத்திலும் தாக்கம் ஏற்படுகிறது.

ஏற்கனவே உலக பொருளாதாரம் நெருக்கடியில் காணப்படுகிறது. இவ்வாறான சூழ்நிலைக்கு கூட்டுறவு எவ்வாறு முகம்கொடுக்கப்போகிறது. கடந்தகால வரலாற்றை உற்று நோக்குமிடத்து 1930 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு எமது நாடு முகம் கொடுத்திருந்தது.

இருப்பினும் இந்தக் காலப் பகுதியே கூட்டுறவுத் துறையில் பாரிய எழுச்சி கண்ட காலப்பகுதியாக காணப்படுகிறது. தற்போதுள்ள காலமும் பொருளாதார நெருக்கடியான காலமாகும். தற்போதுள்ள அரசும் கூட்டுறவுத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசாக காணப்படுவதால் கூட்டுறவுக்கு நல்ல வாய்ப்பு காணப்படுகிறது.

கூட்டுறவுத் துறையை வளர்ச்சி நோக்கிக் கொண்டு செல்வதற்காக 3 பிரதான யுத்திகளை கையாள கூடியதாக இருக்கும். அவையாவன பொருளாதார நெருக்கடி மத்தியில் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு இரண்டாம் படி சங்கங்களின் உதவி முக்கியம். சில கூட்டுறவுச் சங்கங்கள் தமது நிலையில் இருந்து நலிவடையும் போது கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், சம்மேளனம், சபை போன்றவை கை கொடுக்க வேண்டும். இந்தக் காலத்துக்கு ஏற்றது போன்று ஆய்வு செய்து அவர்களுக்கு பொருத்தமான திட்டங்களை வழங்க வேண்டும். வெறுமனே எழுத்துருவில் அறிக்கை வடிவில் இருக்காது செயல்வடிவத்திலும் இவ் இரண்டாம் படிச் சங்கங்கள் செயற்பட வேண்டும்.

இளம் சமூகத்தின் பங்கு அதிகம் தேவைப்படும். கூட்டுறவுத் துறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் இம் மாற்றமானது இளம் சமுதாயத்தில் இருந்து வர வேண்டும். இது பாடசாலை மாணவர்களிடையே செல்ல வேண்டும். முன்னர் இருந்தது போன்று மீண்டும் பாடசாலை கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் அவர்களிடையே கூட்டுறவு பற்றிய அறிவை கொண்டு செல்ல முடியும். இதற்கு உதாரணமாக வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஒரு செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. அதாவது பல்கலைக்கழக மாணவர்களுக்கு கூட்டுறவு பற்றிய பயிற்சி மற்றும் அனுபவத்தை வழங்கியுள்ளோம்.

தொடர்ச்சி▼

# கூட்டுறவுத் துறையில் சிறந்த மாற்றம் இளையோரிடம் இருந்து வரவேண்டும்!

**தொடர்ச்சி▲**

இது வரையில் யாழ். பல்கலைக்கழகத்தின் 60 மாணவர்கள் இந்தப் பயிற்சியைப் பெற்றுக் கூட்டுறவு பற்றிய தெளிவான அறிவினைப் பெற்றுள்ளனர். இவ்வாறான திட்டங்களை மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவை உண்டு.

மேலும் கல்விப் பொதுத் தராதரம் உயர்தரத்தை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பயிற்சியும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இதேபோன்று கூட்டுறவுச் சங்கங்களும் இளைஞர்களை தம்முடன் இணைக்க வேண்டும். தற்போது உள்ள அரசின் கொள்கை எமது பொருளாதாரத்தை உற்பத்தி பொருளாதாரமாக மாற்றல் ஆகும். உற்பத்தியை முன்கொண்டு செல்லல் எனும் போது இயங்காத தொழிற்சாலைகள், இயங்காத வாகனங்கள், இயங்காத சொத்துக்கள் மற்றும் இயந்திரங்களை இயங்க வைத்தல் வேண்டும்.

அடுத்த கட்டமாக வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியால் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் திட்டம் செயற்படுத்த எண்ணியுள்ளோம். உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதுடன் அதனை சந்தைப்படுத்தும் வாய்ப்புகளையும் அதிகரிக்க வடக்கில் உள்ள பலமான சங்கங்களுடன் இணைந்து கொத்தணி ஒன்றை உருவாக்கிப் பெருமளவான உற்பத்தியை மேற்கொள்ள உத்தேசித்துள்ளோம்.

விவசாயத் திணைக்களங்களுடன் இணைந்து அடுத்தடுத்த வருடங்களில் விவசாய கூட்டுறவுச் சங்கங்களையும் உருவாக்க எண்ணியுள்ளோம். எத்தனையோ பெரிய அரிசி ஆலைகள் இயங்காத நிலையில் உள்ளன. அவற்றையும் இயங்க வைப்பதற்கான முயற்சியெடுத்துள்ளோம். அத்துடன் எமது வடமாகாண ஆளுநரின் பார்வை வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் திணைக்களத்தின் பார்வை எல்லாம் ஒருமித்ததாக காணப்படுகிறது.

இவ்வாறான ஒரு வாய்ப்பு இனி பல தசாப்தங்கள் கடந்தாலும் கிடைக்காது. எனவே இவ்வாறான வாய்ப்பை நாம் சரியாகக் கையாள வேண்டும். இதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள், திணைக்களம் ஆகியவற்றுடன் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும்.– என்றார்.






# உயிர் காத்தல் பிரிவினருக்கு தீயணைப்புப் பயிற்சி வழங்கல்!

(தில்சாத் பர்வீஸ் )

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை (11) அக்கரைப்பற்று மாநகர சபை கூட்ட மண்டபத்தில் தீயணைப்பு தொடர்பான கற்கை நெறியும் அக்கரைப்பற்று நீர் பூங்காவில் பயிற்சி நெறியும் நடைபெற்றன.

இந்த நிகழ்வை தேசிய காங்கிரஸின் தேசிய தலைவரும் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கரைப்பற்று மாநகர மேயருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா, அக்கரைப்பற்று மாநகர சபையின் செயலாளர் ஹபீபுர் ரஹ்மான் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வுக்கு வளவாளராக கல்முனை மாநகர சபையின் தீயணைப்பு பிரிவு அதிகாரி கே.எம்.றுமி, அக்கரைப்பற்று மாநகர சபையின் தீயணைப்பு அதிகாரி ஜே.றிஸ்வான் ஆகியோரால் தீ விபத்து ஏற்படும் நேரத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும், தீயை கட்டுப்படுத்தும் கருவிகளை பயன்படுத்தும் முறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான பயிற்சிகளும் வழங்கி வைக்கப்பட்டன.










# வலய மட்ட சமூக விஞ்ஞான போட்டிக்கான சான்றிதழ்கள்!

கிண்ணியா கல்வி வலயத்தில் வலய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று (11) ஆம் திகதி கிண்ணியா வலயக் கல்விப் பணிமனையின் பிரதான மண்டபத்தில் வலய இணைப்பாளர் வை. றாஷிக் பரீட் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. இஸட்.எம். முனவ்வரா நளீமும் கௌரவ அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) எம்.சீ. நஸாரும் வலய அதிகாரிகள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.







# சம்மாந்துறையில் “கிளீன் ஸ்ரீலங்கா”!



(தில்சாத் பர்வீஸ் )

“கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத் திட்டத்தின் கீழ் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.நௌசாத் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை (11) நடைபெற்றது.

இதன்போது சம்மாந்துறை சந்தை தொகுதி மற்றும் அதனை அன்மித்த பகுதிகளில் டெங்கு நுளம்புகளை கட்டுப் படுத்தும் வகையில் புகை வீசிறப்பட்டது

இந்த நிகழ்வைச் சம்மாந்துறை பொலிஸ் உத்தியோகத்தர்கள், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் இணைந்து இந்தத் திட்டத்தை மேற்கொண்டனர்.மேலும் இந்த நிகழ்வுக்குச் சம்மாந்துறை நலன்புரி சமூக சேவைகள் அமைப்பு அனுசரணை வழங்கிய இருந்தது.



சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபர், சம்மாந்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.ஐ.எம். ஹனீபா மற்றும் சம்மாந்துறை நலன்புரி சமூக சேவைகள் அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.



# மதுரங்குளி - தொடுவா பிரதான பாதையை இரட்டைப் பாதையாக மாற்றக் கோரிக்கை!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மதுரங்குளி – தொடுவா பிரதான பாதையை இரட்டைப் பாதையாகப் புனரமைத்துக் கொடுக்குமாறு மதுங்குளி வர்த்தக மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் தொழிலதிபர் எம்.எஸ். ரி.அமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

மதுரங்குளி – தொடுவா பிரதான வீதியின் கடையாமோட்டை (டச்சுப் பாலம்) பகுதியில் உள்ள புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலம் அரசியல் பிரமுகர்களால் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கயான் ஜானக, முஹம்மது பைஸல், புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் மற்றும் கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் ஏ.எஸ்.எம். ரிகாஸ் ஆகியோரிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 50 வருட கால பழமை வாய்ந்த இந்தப் பாலத்தை ஒரு குறுகிய காலத்துக்குள் மிகவும் நேர்த்தியான முறையில் நிர்மாணித்துக் கொடுத்தமைக்காக அரசுக்கும், இதற்காக முழுமையாக முயற்சிகள் செய்த அனைவருக்கும் மதுரங்குளி வர்த்தக சங்கம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் இதன்போது கூறினார்.

இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகள் கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பாலத்தை உடைத்து புனரமைப்பதாக இருந்தால் பாலத்துக்கு அருகே தற்காலிக வீதி அமைக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான நிதி வசதிகள் இல்லாத காரணத்தால் பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் பொறியியலாளர்கள் உள்ளிட்டோர் இந்த விடயம் தொடர்பில் மதுரங்குளி வர்த்தக சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர் என்றும் அவர் இங்கு கூறினார்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஹம்மது பைஸலும் தற்காலிக வீதி அமைப்பது தொடர்பில் மதுரங்குளி வர்த்தக சங்கத்தோடு பேசினார். அவர்களின் அந்த கோரிக்கைக்கு அமைய மதுரங்குளி வர்த்தக சங்கம் மற்றும் ஏனைய தனவந்தர்களின் நிதி பங்களிப்பில் 10 நாள்களுக்குள் தற்காலிக பாதையை அமைத்துக் கொடுத்தோம்.

இந்தப் பிரதேசமானது சுற்றுலாத்துறையிலும் தும்பு, தேங்காய் ஏற்றுமதியிலும் இலங்கைக்கு அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொடுப்பதில் அதிக பங்கு வகிக்கின்றது.

இந்தப் பிரதேசத்தில் 500 இற்கும் அதிகமான தும்பு தொழிற்சாலைகள் காணப்படுவதுடன் தும்பு, மீன், மறக்கறி வகைகள், பழவகைகள், இறால் , கைத்தொழிற்சாலைகளின் உற்பத்திகள் என்பனவற்றை உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிக்காக இந்த வீதியூடாக நாளாந்தம் நூற்றுக் கணக்கான வாகனங்கள் பயணம் செய்கின்றன.

கற்பிட்டி தொடக்கம் உடப்பு வரையிலான நூற்றுக்கணக்கான கிராமங்களைச் சேர்ந்த பொது மக்களும் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

பிரதான ஒரு வீதியாகவும் மதுரங்குளி – தொடுவா வீதி காணப்படுகிறது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

எனவே , பொதுமக்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் நலன்களை கவனத்திற்கொண்டு விஷேட திட்டத்தின் கீழ் மதுரங்குளி – தொடுவா பிரதான வீதியை இரட்டைப் பாதையாக மாற்றி புனரமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கும் எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளார் என்றும் இதுதொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மதுங்குளி வர்த்தக சங்கம் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கம் என்பனவற்றின் தலைவர் தொழிலதிபர் எம்.எஸ்.ரி.அமான் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர்களான கயான் ஜானக, முஹம்மது பைஸல் ஆகியோர், மேற்படி இரட்டைப் பாதை மற்றும் வர்த்தக வலயம் உள்ளிட்ட அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்துவர் என்று வாக்குறுதியளித்துள்ளனர்.

### “ஓம்” இன்றிய கதிர்காமம்!

# கதிர்காமம் தமிழ்மக்களிடம் இருந்து முற்றாகவே கைநழுவிப் போகின்றதா?




கதிர்காமத்தில் தமிழ் மக்களது பாரம்பரியங்கள் மற்றும் அவர்களது மடங்கள் அடையாளங்கள் அழிக்கப்பட்டமை காரணமாக தமிழ் மக்களுக்கும் கதிர்காமத்துக்கும் இடையிலான உறவில் இடைவெளி ஏற்பட்டது என்பது அண்மைக் காலமாக கூறப்பட்டு வருகிறது.

எனினும், யாழ். செல்வச்சந்நிதி தொடக்கம் வடக்கு, கிழக்கு, மலையகம் என நாடெங்கிலும் இருந்து பாதயாத்திரை மற்றும் ஏனைய வழிகளில் தமிழர்கள் லட்சக்கணக்கில் கதிர்காமம் சென்று வருகின்றனர்.

இந்தப் பாதயாத்திரை மறுசீரமைக்கப்பட வேண்டும், வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்றெல்லாம் வருடாவருடம் உற்சவ காலப் பகுதியில் கூறுவார்கள். பின்னர் அந்த வேகம் குறைந்து விடும்.

இம்முறை 50 வீதமானோர் பௌத்தர்கள் சப்பாத்து, கண்ணாடி சகிதம் சுற்றுலாப் பயணிகள் போல் பயணித்ததையும் காணமுடிந்தது. ஆனால் வெள்ளைக்காரர்கள் எம்மவர் போல் வேட்டியுடன் திலகமிட்டு பயணித்ததையும் காணமுடிந்தது. எம்மவர்களில் சிலர் பைலாக கும்மாளம் என்று பயணித்தமையும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது.

அந்தக் காலத்தில் தமிழருக்கும் கதிர்காமத்துக்கும் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. எனினும் இந்தத் தொடர்பு 1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறைவடைந்தது. இடைவெளி ஏற்படத் தொடங்கிவிட்டது.

இதற்கு பல காரணங்கள் உள்ளன. குறிப்பாக கதிர்காமத்தில் காணப்பட்ட இராமகிருஷ்ண மிஷன் மடத்தை, அரசு சுவீகரித்துக் கொண்ட பின்னர், தமிழ் மக்கள் அங்கு செல்வதை குறைத்துக் கொண்டார்கள்.

குறித்த கதிர்காமம் இராமகிருஷ்ண மடம் 1953 இல் பிரதமர் டட்லி சேனநாயக்காவால் திறந்து வைக்கப்பட்டது.

1943 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பல அமைப்புகள் கதிர்காமத்தில் உள்ள புனித ஆலயத்துக்கு வரும் ஆயிரக்கணக்கான யாத்திரீகர்களுக்கு சேவை செய்யத் தொடங்கியது. அதன் ஓரங்கமாக உலகளாவிய ரீதியில் வியாபித்து ஜீவசேவையாற்றிவரும் இராம கிருஷ்ண மிஷன் அமைப்பும் கதிர்காமத்தில் காலூன்றியது.

அதன் காரணமாக விசாலமான கட்டடங்கள் கட்டப்பட்டு ராமகிருஷ்ண மிஷன் மடம் 1953 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் திகதி அப்போதைய இலங்கைப் பிரதமராக இருந்த மாண்புமிகு டட்லி சேனாநாயக்கவால் முறையாகத் திறந்து வைக்கப்பட்டது.

அப்போதிருந்து, மத வேறுபாடின்றி யாத்திரீகர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்பட்டது.

ஜூலை – ஒகஸ்ட் மாதங்களில் நடக்கும் வருடாந்த திருவிழாவின் போது, 17 நாள்களுக்குத் தொடர்ச்சியாக, ஒரு நாளைக்கு பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட யாத்ரீகர்களுக்கு இலவச உணவை மிஷன் வழங்கியது. மத விரிவுரைகள், சொற்பொழிவுகள் மற்றும் பஜனைகள் மடத்தில் வழக்கமான நடவடிக்கைகள் 1976 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி அரசால் கையகப் படுத்தப்படும்வரை மிஷன் ஒரு குடியுரிமை சுவாமியின் மேற்பார்வையின் கீழ் அதன் உன்னத சேவைகளைத் தொடர்ந்தது.

அத்தகைய உன்னத ஜீவ சேவையாற்றிய இராம கிருஷ்ண மிசன் மடத்தை மீண்டும் ஒப்படைத்து சமாதான பூமி புனித பூமி என்ற வாசகத்துக்கு அர்த்தம் சேர்க்குமாறு உலக இந்துக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்து கலாசார அமைச்சு திணைக்களம் அங்கு யாத்திரீகர்கள் விடுதியை அமைத்திருந்தாலும் அதிலும் தென்பகுதி மக்களே முன் பதிவுகளை செய்து கொள்வதால், தமிழ் மக்கள் அங்கு வந்து தங்குவதற்கு இடம் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்து யாத்திரீகர் விடுதியில் பெரும்பாலும் உற்சவம் தொடங்க முன்பே முன்பதிவுகள் பூர்த்தி அடைந்து விடும். அன்னதானம் நடப்பதால் அவர்களுக்குப் பொது மண்டபங்கள் ஒதுக்கப்படுகின்றன சிலவேளைகளில்

தொடர்ச்சி▼



# கதிர்காமம் தமிழ்மக்களிடம் இருந்து முற்றாகவே கைநழுவிப் போகின்றதா?

தொடர்ச்சி▲

பெரஹரா கலைஞர்கள் தங்குவார்கள். அதாவது இந்துக்கள் உணர்வோடு தங்க அங்கு இடமில்லை.

அன்று கதிர்காம வாசலில் 'ஓம் முருகா' என தமிழில் வாசகம் காணப்பட்டது. ஆனால், தற்போது 'ஓம்' என்றை சொல்லை நீக்கி விட்டார்கள். இன்றும் முகப்பில் ஓம் இல்லை.

அதேபோன்று கதிர்காம கந்தன் மீது பன்னிரண்டாம் நூற்றாண்டில் பாடப்பட்ட திருப்புகழை அங்கே பாடுவதை தற்போது நிறுத்திவிட்டார்கள். தமிழ் மக்கள் மலையேறுவதற்கு சென்றால், அங்கே இருக்கும் வாகன ஓட்டுநர்கள் கட்டுப்பாடற்ற முறையில், வாடகை பணம் வசூலிக்கின்றார்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றம், யாத்திரிகர் மடத்தை அமைப்பதற்குக் கதிர்காம ஆலய நிர்வாகம் காணி ஒன்றை வழங்க வேண்டும்.

கதிர்காம கந்தனது அற்புதங்கள் பெருமைகள் ஆய்வுகள் தொடர்பான தமிழ் புத்தகங்களை அங்கே காட்சிப்படுத்த வேண்டும்.

ஆலயத்தின் வாசகங்களையும் அறிவித்தல்களையும் தமிழ் மொழியிலும் காட்சிப்படுத்த வேண்டும். இன்று அவை நடக்காமலில்லை. எனினும் போதுமானதாக இல்லை.

இதனை முன்னர் ஒரு தடவை தெல்லிப்பழை துர்கா தேவஸ்தானத்தின் தலைவர் ஆறுதிருமுகனும் தெரிவித்திருந்தார்.

அத்துடன், கதிர்காமத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாத்திரிகள் தங்குமிடம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான காணியை கதிர்காம ஆலய நிர்வாகம் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தார்.



ஆனால் அந்தக் கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கிறது.

இனசௌஜன்யம் நல்லிணக்கம் ஐக்கிய சமாதான பூமி பற்றி பேசுகின்ற அதேவேளை மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்க வேண்டும் என்பதே நோக்கமாகும்.

**வித்தகர் விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா,**
காரைதீவு.





# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் தெய்வீக வில்லிசையும் உதவித் திட்டமும்

வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் தெய்வீக வில்லிசையும் உதவித் திட்டம் வழங்கலும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில், தவத்திரு அருணகிரிநாதர் சுவாமிகளின் குருபூசை நிகழ்வை முன்னிட்டு சுவாமிகளின் ஆற்றுகை தொடர்பான தெய்வீக வில்லிசை இடம்பெற்றது.

ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை குழுவினரின் இயக்குனர் எஸ்.எஸ். குருஜி தலைமையில், பக்திப்பாடல் - லோகநாதன், ஹார்மோனியம் - இசைக்கலாமணி நடேசு செல்வச்சந்திரன், வில்கடம் - கலைஞர் ந.விமலநாதன், மிருதங்கம் - கலாவித்தகர் க.சிவகுமார், உடுக்கு - வித்துவான் வே.சிவமூர்த்தி ஆகிய அணி செய் கலைஞர்களுடன் இடம்பெற்றது.

உதவித் திட்டங்களாக, தொண்டைமானாறு, கெருடாவில் தெற்கு விவேகானந்தா முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுக்காகப் பரிசுப் பொருள்களுக்கான செலவுகளுக்கு 20 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

ஸ்ராலின் வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு மாதாந்த மருத்துவ கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த நிகழ்வு 10.45 மணி தொடக்கம் 12 மணிவரை இடம்பெற்றது.












# யாழ். மாநகர சபைக்கு புல் வெட்டும் இயந்திரங்கள்!

## பிரதி மேயரின் கோரிக்கைக்கு அமைய லயன்ஸ் கழகம் வழங்கியது

யாழ்ப்பாணம் கேற்வே லயன்ஸ் கழகத்திடம் யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் இம்மானுவல் தயாளன் விடுத்த கோரிக்கைக்கு அமைவான, உடனடியாகப் புல் வெட்டும் இயந்திரங்கள் இரண்டு இன்று (12) வழங்கப் பட்டுள்ளன.

இன்று யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு வருகைதந்த லயன்ஸ் கழகத்தினர், யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் இம்மானுவல் தயாளன், யாழ். மாநகர சபை ஆணையாளர் ச. கிருஷ்ணேந்திரன் ஆகியோரிடம் இந்த இயந்திரங்களைக் கையளித்தனர்.மேலும் இரண்டு இயந்திரங்களைப் பெற்றுத் தர அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் உறுப்பினர்களும் கலந்து கொண்ட னர்.



# பழந்தோட்ட பிள்ளையார் ஆலய சங்காபிஷேகம் இன்று !

(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக வளாகத்தில் அமைந்துள்ள பழந்தோட்ட பிள்ளையார் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் பிரதேச செயலாளர் உ. உதயஸ்ரீதர் தலைமையில் அலுவலக உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் இன்று சனிக்கிழமை (12) இடம்பெற்றது.

இதன் போது பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்களால் மாடித் தோட்டத்தில் நடுகை செய்யப்பட்ட பாரம்பரிய நெல் இன அறுவடையும் சம்பிரதாய பூர்வமாக இடம்பெற்றது.





# அகமதாபாத் விமான விபத்து; முதற்கட்ட அறிக்கை வெளியீடு



கடந்த ஜூன் மாதம் 12 ஆம் திகதி அகமதாபாத்தில் இடம்பெற்ற விமான விபத்து குறித்த 15 பக்கங்கள் கொண்ட முதற்கட்ட அறிக்கை இன்று வெளியானது.

அதன்படி, விபத்துக்குள்ளான ஏர் இந்தியா விமானத்தின் கறுப்பு பெட்டியிலிருந்து மீட்கப்பட்ட உரையாடல்களை வைத்து விசாரணை பணியகம் ஒரு அறிக்கையைத் தயார் செய்து வெளியிட்டு உள்ளது.

விமானம் புறப்பட்ட 32 நொடிகளில் இரண்டு இயந்திரங்களும் திடீரென பழுதானதே விபத்திற்கு காரணம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானத்தின் இயந்திரங்களுக்கான எரிபொருள் விநியோகம் தடைப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இதனால் விமானம் மேல் எழும்ப முடியாமல் விழுந்து நொறுங்கியுள்ளது.

இதற்கிடையே, அறிக்கையில் விமானம் புறப்பட்ட சில நொடிகளிலேயே 2 விமானிகள் பேசிக்கொண்டனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி, ஒரு விமானி, மற்றொரு விமானியிடம் எரிபொருள் செல்லும் வால்வை ஏன் அடைத்தீர்கள் எனக் கேட்டுள்ளார். அதற்கு, தான் அடைக்கவில்லை என மற்றொரு விமானி பதிலளித்திருப்பதும் விசாரணை அறிக்கையில் வெளியாகியுள்ளது.

முதற்கட்ட அறிக்கை வெளியான நிலையில் விசாரணை தொடரும் எனவும் முழுமையான அறிக்கை வெளிவர இன்னும் 6 மாதங்கள் ஆகும் என்றும் விமான விபத்து குறித்த புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

# வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் 17 உரைகளை நிகழ்த்தினார் மோடி



வெளிநாடுகளின் நாடாளுமன்றங்களில் பிரதமர் நரேந்திர மோடி 17 உரைகளை ஆற்றியுள்ளார். இதற்காக தனது எக்ஸ் தளத்தில் பா.ஜ.க. பெருமிதம் தெரிவித்த நிலையில், காங்கிரஸ் இதனைக் கடுமையாக விமர்சித்துள்ளது.

பிரதமர் மோடி சமீபத்தில் ஐந்து நாடுகளுக்கு விஜயம் செய்து, கானா, டிரினிடாட்டூடொபாகோ மற்றும் நமீபியா நாடாளுமன்றங்களில் உரையாற்றினார். கடைசியாக நமீபியா நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி உரையாற்றியபோது, அந்நாட்டு எம்பிக்கள் எழுந்து நின்று கைதட்டி வரவேற்றனர்.

இது, பிரதமர் மோடி வெளிநாட்டு எம்.பிக்கள் இடையே ஆற்றிய 17 ஆவது உரை. இதன் சிறப்பு என்னவெனில், இது அவருக்கு முன் இருந்த அனைத்து காங்கிரஸ் பிரதமர்களின் மொத்த உரைகளுக்கும் சமமானது. இதை தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்ட பா.ஜ.க. தலைமை, பிரதமர் மோடி மீது பெருமிதம் தெரிவித்தது.

இது குறித்து பா.ஜ.கவின் எக்ஸ் தளத்தில், “பிரதமர் மோடி வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் இதுவரை 17 உரைகளை நிகழ்த்தியுள்ளார். இது பல தசாப்தங்களாக காங்கிரஸ் பிரதமர்கள் அனைவரும் ஆற்றிய உரைகளுக்கு சமம். காங்கிரஸ் பிரதமர்கள் பல தலைமுறைகளாக ஆற்றியதை அவர் ஒரே தசாப்தத்தில் சாதித்துள்ளார். இது உலகளவில் மிகவும் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவராக அவரது நற்பெயரை உறுதிப்படுத்துகிறது.” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் மோடிக்கு முன்பாக அப்பதவியிலிருந்த காங்கிரஸ் பிரதமர்கள் ஆற்றிய உரைகளின் எண்ணிக்கையும் அப்பதிவில் பட்டியலிடப்பட்டுள்ளது. இதன்படி, ஜவஹர்லால் நேரு (3), இந்திரா காந்தி (4), ராஜீவ் காந்தி (2), நரசிம்ம ராவ் (1) மற்றும் மன்மோகன் சிங் (7) என இவர்கள் மொத்தம் 17 உரைகளை நிகழ்த்தியுள்ளனர்.

அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்தில் இரண்டு முறை வெளிநாடுகளின் நாடாளுமன்றங்களில் உரையாற்றினார். ஜனதாவின் பிரதமரான மொரார்ஜி தேசாய் ஒரே ஒரு நாட்டின் நாடாளுமன்றத்தில் உரையாற்றி இருந்தார். பிரதமர் மோடி 2014 இல் அவுஸ்திரேலியா, பிஜி, பூட்டான் மற்றும் நேபாள நாடாளுமன்றங்களில் உரையாற்றினார். 2015 இல் மொரீஷியஸ், மங்கோலியா, ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து மற்றும் இலங்கை நாடாளுமன்றங்களில் உரையாற்றினார். 2016 இல் அவர் அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்திலும், 2023 இல் அதே நாட்டிலும் மீண்டும் உரையாற்றினார்.

உகண்டா நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி, 2018 இல் உரையாற்றினார். இதைத் தொடர்ந்து 2019 இல் மாலைதீவு, 2024 இல் கயானா, இந்த ஆண்டு, கானா, டிரினிடாட் மற்றும் டொபாகோ மற்றும் நமீபியா நாடாளுமன்றங்களில் பிரதமர் மோடி உரை நிகழ்த்தி உள்ளார்.

பா.ஜ.கவின் பெருமிதத்தை விமர்சிக்கும் வகையில் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், செய்தி தொடர்புப் பொறுப்பாளருமான ஜெய்ராம் ரமேஷ், ‘இந்தியா தனது சூப்பர் பிரீமியம், அடிக்கடி பறக்கும் பிரதமரை வரவேற்கிறது. அவர் மூன்று வாரங்களுக்கு நாட்டில் இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பின்னர், மீண்டும் விமானத்தில் பயணம் செய்வார்.

இப்போது அவர் இங்கு இருப்பதால், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் அவருக்காகக் காத்திருந்த மணிப்பூரைப் பார்வையிட அவருக்கு நேரம் கிடைக்கும். பஹல்காம் பயங்கரவாதிகள் இன்னும் நீதியின் முன் நிறுத்தப்படாத தற்கான காரணத்தை மறுபரிசீலனை செய்யுங்கள். அவரது சொந்த மாநிலத்தில் உள்கட்டமைப்பு சரிவுகளைப் பற்றி சிந்தியுங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இமாச்சலப் பிரதேசத்திற்கு உதவி வழங்குங்கள்” எனக் குறிப்பிட்டுள்ளார்.





# மியன்மாரில் புத்த மடாலயம் மீது வான்வழித் தாக்குதல்; 23 பேர் பலி

மியன்மார் நாட்டின் மத்திய மாகாணத்தில், அமைந்திருந்த புத்த மடாலயத்தின் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் அங்கு தஞ்சமடைந்திருந்த மக்களில் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சகாயிங் மாகாணத்தில் உள்நாட்டு கிளர்ச்சிப்படைக்கும், மியன்மார் இராணுவத்துக்கும் இடையில் கடந்த சில வாரங்களாக மோதல்கள் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தநிலையில், அம்மாகாணத்தின் லின் தா லூ கிராமத்தில் அமைந்திருந்த புத்த மடாலயத்தின் மீது நேற்று நள்ளிரவு போர் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில், 4 குழந்தைகள் உட்பட 23 பேர் கொல்லப்பட்டதாக, உள்நாட்டு கிளர்ச்சிப்படை தெரிவித்துள்ளது.

இருதரப்புக்கும் இடையில் நடைபெறும் மோதல்களிலிருந்து தப்பித்து மடத்தில் தஞ்சமடைந்திருந்த சுமார் 150 இற்கும் மேற்பட்டோர் இரவு உறங்கிக் கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

30 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர் எனவும் அதில் 10 பேரது உடல்நிலையானது தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனினும், கிளர்ச்சிப்படைகளை மட்டுமே குறிவைத்து தங்களது தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகக் கூறும், மியன்மார் இராணுவம்தான் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாகக் குற்றம்சாட்டப்படுகிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங் சான் சூகி தலைமையிலான அரசை கைப்பற்றி, இராணுவத்தின் ஆட்சி அமைக்கப்பட்டது முதல் மியன்மாரில் உள்நாட்டு மோதல்கள் அதிகரித்துள்ளது.





















# 1300 அரசு ஊழியர்கள் பணிநீக்கம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவு

அமெரிக்க வெளியுறவுத்துறையில் உள்ள 1300 அரசு ஊழியர்களை பணி நீக்கம் செய்ய அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப் பேற்ற நாள் முதல் நாட்டை முன் எப்போ தும் இல்லாத வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்வது நோக்கம் என ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

அதனை செயல்படுத்தும் பொருட்டு, நிர்வாக சீர்திருத்தம், வரி விதிப்பு என ஒவ்வொரு கட்டங்களாக அதிரடி நடவடிக் கைகளை எடுத்து வருகிறார்.

இந்த நிலையில் சீர்திருத்த நடவடிக் கையின் ஒரு அங்கமாக, வெளியுறவுத் துறையில் உள்ள 1300 பணியாளர் களை முதல்கட்டமாக பணிநீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

அவரின் உத்தரவுப்படி, உள்நாட்டு பணிகளில் ஈடுபட்டு வந்த 1107 பேரும், வெளிநாட்டு பணிகளில் 246 பேரும் பணிநீக்கம் செய்யப்படுகின்றனர்.

நிர்வாக சீரமைப்பின் ஒரு பகுதியாக அனைவரும் பணிநீக்கம் செய்யப்பட்டி ருப்பதாகவும் அவர்களுக்கு அதிகா ரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பணி நீக் கத்தை அறிந்த பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் அலுவலகங்களின் வெளியே போராட்டத்தில் ஈடுபட்டுவருகின் றனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரி வித்துள்ளன.












பக்கங்கள் 04

கனடா முரசு

சனிக்கிழமை | 12/07/2025

## டொரொண்டோ எல்லையில் ஒருவர் மர்மமான மரணம்



டொரொண்டோ எல்லைப் பகுதியில் மர்மமான 02





# காட்டுத்தீயால் மெனிடோபாவில் மீண்டும் அவசர நிலை அறிவிப்பு

கனடாவின் மெனிடோபா மாகாணத்தில் நிலவும் தீவிர காட்டுத்தீ பரவல் காரணமாக மீண்டும் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு வாழும் மக்கள் உயிர் பாதுகாப்பிற்காக இடம் மாற்றப்பட வேண்டிய சூழ்நிலையால், மாகாணத்தில் இரண்டாவது அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர நிலை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டதாக முதல்வர் வாப் கின்யூ தெரிவித்தார்.

02

# ஒட்டாவாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி



ஒட்டாவாவின் கிராமப்புற மேற்கு பகுதியில் உள்ள ரிச்மண்ட் அருகே இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஒட்டாவா மருத்துவ அவசர சேவைகள் பிரிவு இந்த தகவலை வெளியிட்டுள்ளது. விபத்து மன்ஸ்ஃபீல்டு மற்றும் பவுன்லீ சாலைகளுக்கு இடையில் உள்ள ஹன்ட்லி சாலையில் இடம்பெற்றுள்ளது.

SUV வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதிக் கொண்டதாக அவசர அழைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கு சிகிச்சை அளிக்க முயற்சிக்கப்பட்ட போதிலும், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த நபர் தொடர்பான விபரங்கள் தற்போது வெளியாகவில்லை. இந்த விபத்து தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




# நடிகரின் உணவகத்தில் துப்பாக்கிச்சூடு; காலிஸ்தான் தீவிரவாதி பொறுப்பேற்பு

கனடாவின் பிரிட்டிஷ் கொல்பியா மாகாணம் சர்ரே நகரில் Kap's Cafe என்ற உணவகம் உள்ளது. இது பஞ்சாபை சேர்ந்த நகைச்சுவை நடிகர் கபில் சர்மாவுக்கு சொந்தமானது என கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்த உணவகத்தில் வியாழக்கிழமை அதிகாலை 1.50 மணியளவில் மர்ம நபர் ஒருவர் 8 முறை துப்பாக்கியால் சுட்டுவிட்டு பிறகு அங்கிருந்து காரில் தப்பிச் சென்றார். அதிர்ஷ்வசமாக இதில் எவரும் காயம் அடையவில்லை. மேலும் உணவக கட்டடத்திலும் அதிக சேதம் ஏற்படவில்லை.

இந்நிலையில் இந்த தாக்குதலுக்கு காலிஸ்தான் தீவிரவாத அமைப்பான பப்பர் கல்சா இன்டர்நேஷனல் (பி.கே.ஐ) உறுப்பினர் ஹர்ஜித் சிங் லட்டி பொறுப்பேற்றுள்ளார்.

ஜெர்மனியை சேர்ந்த இவர் என். ஐ.ஏ-வின் மிகவும் தேடப்படுவோர் பட்டியலில் இருக்கிறார். கபில் சர்மா தொகுத்து வழங்கிய ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் நிஹாங் சீக்கியர்கள் குறித்த கருத்துகளுக்கு லட்டி ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து லட்டி வெளியிட்டுள்ள காணொலி பதிவில்,

"கபில் சர்மாவின் நகைச்சுவை நிகழ்ச்சியின் ஒரு எபிசோடில் நிஹாங் சீக்கியர்களின் உடை அல்லது நடத்தை குறித்து ஒரு கதாபாத்திரம் கேலி செய்துள்ளது. இதற்கு கபில் சர்மா பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும்." என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

பஞ்சாபில் கடந்த ஆண்டு வி.எச்.பி. அமைப்பின் விகாஸ் பிரபாகர் கொலை உட்பட திட்டமிட்ட கொலைகள் மற்றும் கொலை முயற்சிகளுக்கு பின்னால் லட்டி இருப்பதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக லட்டி உள்ளிட்ட பி.கே.ஐ. அமைப்பினர் மீது என்.ஐ.ஏ. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

## டொரொண்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முறையில் உயிரிழந்த நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

டொரொண்டோவின் பிக்கரிங் எல்லைப் பகுதியில் அடையாளம் காணப்படாத சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹைவே 401 மற்றும் வைட்ஸ் ரோட் பகுதியில் உள்ள இடத்திற்கு இரவு 12:06 மணிக்கு அவசர அழைப்பு வந்ததாகவும் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் , அங்கு ஒருவரது உடலை மீட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மரணத்தில் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகள் இருந்ததால், தற்போது இது கொலை விசாரணையாக மாற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மரணமடைந்தவரின் அடையாளம் இதுவரை வெளியிடப்படவில்லை. மேலும் தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை

## காட்டுத்தீயால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பலர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் அவர்களுக்கான தற்காலிக தங்குமிடங்களை விரிவுபடுத்த வேண்டியுள்ளது எனவும் கின்யூ கூறியுள்ளார்.

கடந்த முறையைப் போலவே, லீலா சாக்கர் மையம் மற்றும் பில்லி மோசியென்கோ அரீனாவும் மறுபடியும் மக்கள் தங்குவதற்காக திறக்கப்படுகின்றன.

மேலும், வினிப்பெக் நகர மத்தியிலுள்ள RBC கண்வென்ஷன் மையமும் விரைவில் பயன்படுத்தப்பட உள்ளதாக முதல்வர் தெரிவித்துள்ளார்.

அங்கு வார இறுதியில் ஏற்கனவே திட்டமிட்டிருந்த நிகழ்வுகள் நடைபெற உள்ள நிலையில், அவை மற்றும் வெளியேற்றப்பட்ட மக்கள் இருவருக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்த மாநில அரசு முயற்சிக்கின்றது.

நாம் மிக விரைவாக நடவடிக்கைகள் எடுத்து, இவ்வேளையில் மிகவும் அவசியமான வெளியேற்றத்துக்கான வசதிகளை அதிகரிக்கிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மெனிடோபாவின் கடந்த 30 ஆண்டுகளில் இதுவே மிக மோசமான காட்டுத்தீ பரவல். சாதாரணமாக வருடத்திற்கு 94,000 ஹெக்டேயர் நிலம் தான் தீயால் பாதிக்கப்படும். ஆனால், 2025 இல் இது 11 மடங்கு அதிகமாக, ஒரு மில்லியன் ஹெக்டேயர் நிலம் ஏற்கனவே கருகியுள்ளது.

2025 இல் இதுவரை 261 காட்டுத்தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தற்போது 105 காட்டுத்தீகள் செயல்பாட்டிலேயே உள்ளன.






# கனேடிய தமிழர் பேரவையின் முல்லை நைட் 2025 நிகழ்ச்சி

கனேடிய தமிழர் பேரவை பெருமையுடன் நடாத்திய முல்லை நைட் 2025 நிகழ்ச்சி கடந்த ஜுலை 6 ஆம் திகதி டொரண்டோவில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

முல்லை ஃபாஷன் என்பது வெறும் ஆடைகள் அல்ல. அது எங்கள் சமூகத்தின் பெண்களுக்கு தன்னம்பிக்கையையும், வாழ்க்கை முன்னேற்றத்திற்கான வழியையும் ஏற்படுத்திக்கொடுப்பதற்கான ஒரு செயற்திட்டமாகும். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள், கைத்தறி நெசவு துறையில் தங்கள் சொந்த வருமானத்தைப் பெறும் வகையில் முல்லை ஃபாஷன் திட்டம் தொடங்கப்பட்டது.

முல்லை நைட் நிகழ்ச்சி தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகி, நடனம், வீணை இசை மற்றும் பல கலாச்சார நிகழ்ச்சிகளால் அனைவரையும் மகிழ்வித்திருந்தது.

இந்த விழாவின் சிறப்பம்சமாக முல்லை ஃபாஷன் ஷோ அதிக கவனத்தை ஈர்த்தது. இதன்போது முல்லை நெசவாலையில் தயாரிக்கப்பட்ட கைத்தறி புடவைகள், சறங்கள், அணிகலன்கள் ஆகியவை அழகாக காட்சிப் படுத்தப்பட்டன. நிகழ்வில் கலவந்து கொண்ட பலரும் முல்லை ஆடைகளை அணிந்து வந்தது, ஒருமித்த ஆதரவை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

இந்நிகழ்வில், கனேடிய தமிழர் பேரவையின் தலைவர் குமார் இரத்னம் மற்றும் **Mullai Fashion** திட்டக் குழுவின் பிரதிநிதியான ரவீனா ராஜசிங்கம் உள்ளிட்ட முக்கிய விருந்தினர்கள் உரையாற்றினர்.

தொடர்ச்சி▼






















# கனேடிய தமிழர் பேரவையின் முல்லை நைட் 2025 நிகழ்ச்சி

தொடர்ச்சி▲

அவர்களது உரையில், இலங்கையின் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கான தொடர்ச்சியான ஆதரவையும், **Mullai Fashion** மூலம் உருவாகும் பொருளாதார சுதந்திரத்தின் எதிர்கால வாய்ப்புகளையும் வலியுறுத்தினர்.

இது வெறும் ஒரு கலாசார விழாவாக இல்லாமல், ஒரு முக்கியமான நிதி திரட்டும் முயற்சியாகவும் இருந்தது.

விருந்தினர்களின் உற்சாக பங்கேற்பும், நுழைவுச்சீட்டு விற்பனையிலும், நன்கொடைகளிலும் பெற்ற ஆதரவின் மூலம், புதுக்குடியிருப்பில் செயற்படும் முல்லை கைத்தறி உற்பத்தி மையம் விரிவாக்கத் திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதி திரட்டப்பட்டது.

ஒவ்வொரு பங்கும் ஒரு மாற்றத்தை உருவாக்கும். உங்கள் ஒவ்வொரு பங்களிப்பும், ஒரு பெண்ணின் வாழ்க்கையை உருமாற்றி, அவரும் அவர் சார்ந்தோரும் சுயநம்பிக்கையுடனும், கௌரவத்துடனும், நிலையான வருமானத்துடனும் நிறைந்த எதிர்காலத்தை உருவாக்க உதவுகிறது.

முல்லை நைட் 2025 இல் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்த அனைத்து விருந்தினர்களுக்கும் கலைஞர்களுக்கும், மற்றும் பங்களிப்புகளை வழங்கிய ஒவ்வொருவருக்கும் கனேடிய தமிழர் பேரவை தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துள்ளது.







